**செய்தி வெளியீடு எண்: 365** **நாள் : 19.07.2016**

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **அம்மா** அவர்களின் ஆணைக்கிணங்க மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு. கே.டி. ராஜேந்திரபாலாஜி அவர்கள் தலைமையில் இன்று (19.07.2016) கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறையின் கீழ் செயல்பட்டு வரும் பட்டுவளர்ச்சித் துறை மற்றும் தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் ஆகியவற்றின் செயல்பாடுகளின் முன்னேற்றம் குறித்த கலந்தாய்வுக் கூட்டம், சென்னை தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறையின் கீழ் செயல்பட்டு வரும் பட்டு வளர்ச்சித் துறையின் கீழ் தமிழ்நாட்டு பட்டின் சிறப்பு, உட்கட்டமைப்பு வசதிகள், தமிழ்நாட்டில் மல்பரி சாகுபடி, வெண்பட்டு / கலப்பின பட்டு உற்பத்தி, பயிர்க் காப்பீடு, மருத்துவக் காப்பீடு கிரியா ஊக்கித் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் திட்டங்கள், தமிழ்நாட்டில் பட்டுத் தொழில் மேம்பாடு அடைய எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்தும்,

தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் விற்பனை, கண்காட்சிகள், வெளிநாடு மற்றும் வெளிமாநிலங்களில் தமிழ்நாடு கைவினைப் பொருட்களின் விற்பனையை மேம்படுத்த கைவினைஞர்களுக்கு நிதியுதவி, ஏற்றுமதி, விற்பனை நிலையங்கள், உற்பத்தி, கைவினைஞர்களுக்கான நலத்திட்டங்கள், விருதுகள் ஆகியவை குறித்தும் ஆய்வு செய்யப்பட்டது.

மேலும், பட்டு வளர்ச்சித் துறை மற்றும் தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் தொடர்பான திட்ட அறிவிப்புகளின் நிலை மற்றும் கடந்த ஐந்தாண்டுகளில் (2011–2016ஆம் ஆண்டுகளில்) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி **அம்மா** அவர்களால் விதி எண்.110ன் கீழ் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள் அனைத்தையும் நடைமுறைப்படுத்தப்பட்டதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் துறை அலுவலர்களை பாராட்டினார். வருங்காலங்களிலும் இதே போன்று திட்ட பணிகளை விரைந்து முடித்திட வேண்டுமென்று அறிவுறுத்தினார்கள்.

இக்கூட்டத்தில், கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர் துறை அரசு முதன்மைச் செயலாளர், திரு ஹர்மந்தர் சிங், இ.ஆ.ப.,, தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழக தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், டாக்டர். சந்தோஷ்பாபு, இ.ஆ.ப., மற்றும் பட்டு வளர்ச்சித் துறை மற்றும் தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**